# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 188/மா/2017

ஆணை எண். 279/2017

நாள் : 18/12/2017

திரு A. மாரியப்பன்,
தூத்துக்குடி. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி. – எதிர் மனுதாரர்

தூத்துக்குடி, கணேசபுரம், 505-A, முனிசிபல் காலனியைச் சேர்ந்த திரு A. மாரியப்பன் அவர்களின் 16.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.10.2017 அன்று பெறப்பட்டு, 188/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

தூத்துக்குடி, கணேசபுரம், 505-A, முனிசிபல் காலனியைச் சேர்ந்த திரு A. மாரியப்பன் என்பவர் தூத்துக்குடி மாநகராட்சிக்குத் தேவையான எழுது பொருட்கள் மற்றும் படிவங்கள் வாங்குவதில் நடைபெறும் கீழ்க்காணும் முறைகேடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

1. மாநகராட்சிக்குத் தேவையான எழுதுபொருட்கள் மற்றும் படிவங்களை தூத்துக்குடியில் உள்ள அரசு அச்சகம் மற்றும் கூட்டுறவு சங்கத்தில் வாங்காமல் கோவில்பட்டி நகரில் உள்ள சிதம்பரனார் மாவட்ட அச்சத்தில் வாங்குவது ;
2. கோவில் பட்டியில் உள்ள கூட்டுறவு சங்கம், பெயருக்கு ரிஜிஸ்டர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட லெட்டர் பேடு மட்டுமே கொண்டுள்ள சங்கம் ;
3. இச்சங்கம் பொருட்களை வெளியில் வாங்கி அதிகவிலைக்கு பில் போட்டு விநியோகம் செய்வது ;
4. பல நகராட்சி மற்றும் மாநகராட்சி ஆணையர்களை தொடர்பு கொண்டு வெளிச்சந்தையை விட கூடுதல் விலைக்கு விற்று அதிகப்படியான தொகையை கீழ்மட்டம் முதல் மேல்மட்டம் வரை பங்கு போட்டு கொள்வது.

மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகளில் முதலாவது குற்றச்சாட்டு மட்டுமே தூத்துக்குடி மாநகராட்சிக்கு சம்பந்தப்பட்டது. மற்ற குற்றச்சாட்டுகள் அனைத்தும் கோவில்பட்டியில் செயல்பட்டுவரும் கூட்டுறவு சங்கத்தின் நடைமுறையைப் பற்றியது. மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சி சம்பந்தமான விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ்பெற்று தனது முறையீட்டு மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் நகராட்சி பணியிலிருந்து ஒய்வு பெற்ற துப்புரவு அலுவலர். மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக 19.12.2017 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் தனது 05.12.2017 நாளிட்ட கடிதத்தில் தனது உடல் நிலையைக் காரணம் காட்டி தன்னால் மேற்படி நாளில் நடைபெறும் விசாரணைக்கு வர இயலாது எனத் தெரிவித்துள்ளார். மனுதாரர் தூத்துக்குடி மாநகராட்சி சம்பந்தமான குற்றசாட்டுகளுக்கு போதுமான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. மேலும், தன் உடல் நிலை காரணமாக வர இயலாத நிலை ஏற்பட்டிருந்தால் வேறு ஒரு நாளில் நடைபெறும் விசாரணைக்கு வரத் தயாராக இருக்கிறேன் என்று குறிப்பிட்டிருப்பார். அதைவிடுத்து தான் விசாரணைக்கு வரமுடியாத நிலைக்கு மன்னிக்குமாறு கோரியுள்ளது மனுதாரரின் குற்றச்சாட்டில் உண்மைத் தன்மை இல்லை என்பதே தெளிவாகிறது. மேலும், ஒய்வு பெற்றபின் தனது நேரத்தை வீணாக்காமல் இதுபோன்று மனுக்களை எழுதும் வழக்கத்தினைக் கொண்டுள்ளார் எனவும் தெரிகிறது. தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் வசிக்கும் மனுதாரர் சுமார் 500 கி.மீ. தொலைவில் உள்ள அரக்கோணம் நகராட்சியில் காலம் சென்ற நகராட்சி துப்புரவுப் பணியாளரின் மனைவி திருமதி சுமதி என்பவருக்கு ஓய்வூதியப் பலன்கள் வழங்கவும் மற்றும் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யவேண்டும் என முறையீடு செய்கிறார். விசாரணைக்கும் வருகிறார். முறையீட்டு மனுதாரரின் இச்செயல் பாதிக்கப்பட்ட நபருக்கு உதவிடும் வகையிலா அல்லது வேறு ஏதாவது பிரதிபலன் எதிர்பார்த்து செய்கிறாரா என்று தெரியவில்லை. எது எப்படி இருப்பினும் இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்தால் முறையான ஆவணங்கள் சமர்ப்பிக்கவேண்டும். விசாரணைக்கு அழைத்தால் தவறாமல் வருகை தரவேண்டும். பிரதிபலன் எதிர்பார்த்து எந்தவித முறையீடும் செய்யலாகாது என ஓய்வுபெற்ற துப்புரவு அலுவலருமான மனுதாரருக்கு தெரிவித்து இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக் கொள்ள முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017– ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள், 18–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு A. மாரியப்பன்,
505 A, முனிசிபல் காலனி,
கணேசபுரம், தூத்துக்குடி – 3

2. மாநகராட்சி ஆணையர்,
தூத்துக்குடி மாநகராட்சி,
தூத்துக்குடி.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்